11-09-2023 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

**இனிமையான குழந்தைகளே! இப்போது நாடகம் முடிவடைகின்றது. வீட்டிற்குச் செல்ல வேண்டும். அதனால் இந்த சரீர ரூப ஆடையை மறந்து கொண்டே செல்லுங்கள். தன்னை அசரீரி ஆத்மா என உணருங்கள்.**

கேள்வி: எந்த ஓர் அற்புதமான விளையாட்டு சங்கமயுகத்தில் மட்டுமே நடைபெறுகின்றது? மற்ற யுகங்களில் இல்லை?

பதில்: விட்டு விலகிச் செல்கின்ற விளையாட்டு. இராமர் இராவணனிடமிருந்து விலகி விடச் செய் கின்றார். இராவணன் பிறகு இராமரை விட்டு விலகிச் செல்லுமாறு செய்கின்றான். இது மிக அற்புத மான விளையாட்டு. பாபாவை மறப்பதால் மாயாவின் குண்டு விழுகின்றது. அதனால் தான் பாபா அறிவுரைத் தருகின்றார் - குழந்தைகளே! உங்களது சுயதர்மத்தில் நிலைத்து விடுங்கள். தேகத்துடன் கூடவே தேகத்தின் அனைத்து தர்மங்களையும் மறந்து கொண்டே செல்லுங்கள். நினைவு செய்வதற்கு மிகுந்த முயற்சி செய்யுங்கள். ஆத்ம அபிமானி ஆகுங்கள்.

பாடல்: தலைவனுடன் கூட இருப்போர் யாரோ.....

ஓம் சாந்தி இனிமையிலும் இனிமையான குழந்தைகள் நம்பர் பிரகாரம் புருஷர்த்தத்தின் படி பாடலைக் கேட்டீர்கள். ஒவ்வொரு விஷயத்திலும் நம்பர்வார் எனச் சொல்லப்படுகின்றது. ஏனெனில் இது கல்லூரி அல்லது பல்கலைக் கழகம் என்று சொல்லலாம். அத்துடன் உண்மையான சத்சங்கமும் ஆகும். ஒரே ஒருவர் மட்டுமே சத்யமானவர் எனப்படுகின்றார். அவர் ஒரு முறை மட்டுமே வருகின்றார். இப்போது இச்சமயம் நீங்கள் உண்மையாகவே சொல்கிறீர்கள், நாங்கள் சத்தியமான சங்கத்தில் இருக்கிறோம். பிராமணர்களாகிய நீங்கள் தான் இந்த சத்தியமானவர் எனச் சொல்லப் படுகின்ற ஞானக்கடலின் முன்னிலையில் அமர்ந்திருக்கிறீர்கள். பாடவும் படுகின்றது: யார் தலைவ னோடு கூட இருக்கின்றார்களோ, அவர்களுக்காக ஞான மழை. பிதா தலைவன் என்று சொல்லப்படு கின்றார். குழந்தைகளாகிய உங்கள் முன்னிலையில் தலைவனின் ஞான மழை. குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், நிச்சயமாக ஞானக்கடல், பதீதபாவன் இப்போது நமக்கு முன்பு இருக்கின்றார். நாம் தூய்மை இல்லாமலிருந்து தூய்மையாக அல்லது முள்ளிலிருந்து மலராக ஆகிக் கொண்டிருக் கிறோம். மலராக மாறிவிடுவோம், பிறகு இந்த சரீரம் இருக்காது. மொட்டும் கூட கொஞ்சம் கொஞ்ச மாக மலர்ந்து கொண்டே போகின்றது. சட்டென்று மலர்ந்து விடுவதில்லை. மலர்ந்து மலர்ந்து முழுமையான மலராக மாறிவிடுகின்றது. இப்போது யாருமே முழுமையான மலராக ஆகவில்லை. அதுவோ கர்மாதீத் அவஸ்தா ஆகிவிடும். தேகி அபிமானி யாகக் கடைசியில் தான் ஆகவேண்டும். இப்போது உங்களனைவருடைய புருஷார்த்தமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாபாவோ பரலௌகிக் தந்தை. இவர்கள் இருவரும் சங்கமயுகத்தின் அலௌகிக் தாய்-தந்தை ஆகின்றார்கள். சிலர் முள்ளாகவும் இருக்கின்றனர், சிலர் மொட்டாகவும் இருக்கின்றனர். மொட்டு மலர்வதற்கு சிறிது காலம் பிடிக்கின்றது. நீங்கள் அனைவரும் மொட்டுகளாக இருக்கிறீர்கள், மலர்களாக ஆகப்போகிறவர் கள். சிலர் நன்றாக மலர்ந்திருக்கிறார்கள், சிலர் பாதி மட்டும். ஒரு நாள் நிச்சயம் முழுமையாக மலர்ந்து விடுவார்கள். தோட்டமோ இருக்கின்றது இல்லையா?

நீங்கள் அறிவீர்கள், நாம் முள்ளிலிருந்து மொட்டாகவோ ஆகிவிட்டோம். பிறகு மலராக ஆகிக் கொண்டிருக்கிறோம். முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். சிலரோ மொட்டாகவே முடிந்து போகின்றனர். சிலர் சிறிது மலர்ந்து அழிந்து போகின்றனர். மாயாவின் மிகப் பெரிய புயல்கள் வருகின்றன. சென்டர் திறந்ததுமே சிலர் முடிந்து போகின்றனர். கீழே விழுந்து விடுகின்றனர். மாயா மிகவும் சக்தி வாய்ந்ததாகும். இதுவோ இராம் மற்றும் இராவணனுக்கிடையிலான போட்டி. இராம்-இராம் எனச் சொல்லப் படுகின்றது. திரேதாயுக இராமனை நினைவு செய்கின்றனர் என்பதில்லை. இப்படி இராம்-இராம் என்று பரமாத்மாவுக்குச் சொல்கின்றனர். இராவணனோடு இராமர் ஒப்பிடப்படுகின்றார். இராமர் தந்தை, இராவணன் விரோதி மாயா. மாயாவும் சக்திசாலி தான். இந்த விளையாட்டே ஒருவர் மற்றவரை விட்டு விலகிச் செல்வது. இராமர் உங்களை மாயா இராவணனிட மிருந்து விடுபடச் செய்கிறார். மாயா பிறகு உங்களை இராமராகிய தந்தையிடமிருந்து விடுபட வைக்கின்றது. பாபா சொல்கிறார், தேகத்துடன் கூட தேகத்தின் சம்மந்திகள் யார் யார் இருக்கின்றார்களோ, அனைவரையும் புத்தி மூலம் தியாகம் செய்து விடுங்கள். சர்வ தர்மான்...... நான் இன்னார், இந்த மதத்தைச் சேர்ந்தவன் -- இதை மறந்து தனது சுயதர்மத்தில் நிலைத்து விடுங்கள். தேகத்தின் அனைத்து தர்மங்களையும் விட்டு தன்னைத் தனியாக உணருங்கள். இந்த உலகத்தின் ஒவ்வொரு பொருளிலிருந்தும் தியாகம் செய்யுமாறு செய்கின்றார். என்னுடையவர்களாக ஆகி, என்னையே நினைவு செய்யுங்கள். பாபாவை மறந்தீர்களானால் மாயாவின் குண்டு விழுந்து விடும். பாபாவை நினைவு செய்வதற்கான புருஷார்த்தத்தை நன்கு செய்து கொண்டே இருங்கள். மாயாவும் கூட சக்தி வாய்ந்ததாகும். பாபாவுடையவர்களாக ஆன பின்பும் கூட மாயா வந்து பாபா விடமிருந்து விடுபடச் செய்து விடுகின்றது. பாபாவிடம் சந்தேகம் கொண்டு, அவர் கையை விட்டுவிடக் கூடாது. அரைக்கல்பமாக நீங்கள் என்னை நினைவு செய்தே வந்திருக்கிறீர்கள். நீங்கள் தான் முழுமையான பக்தர்கள் இல்லையா? பக்தியும் நீங்கள் தான் ஆரம்பித்திருக்கிறீர்கள். ஆக, பாபா வந்து மாயாவிடமிருந்து விடுவிக்கிறார். பாபா சொல்கிறார், தன்னை ஆத்மா என உணருங்கள். இந்த ஆடையை (தேகத்தை) மறந்து விடுங்கள். இப்போது நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அந்த நாடகத்திலும் நடிகர்கள் உள்ளனர். அவர்களுக்கும் தெரிந்திருக்கிறது - இதோ இப்போது 5-10 நிமிடங்களுக்குப் பிறகு நமது விளையாட்டு முடிகின்ற நேரம் வந்து விட்டது. பிறகு நாம் வீட்டிற்குச் சென்று விடுவோம். விளையாட்டு முடிவடைகின்ற நேரம் இது புத்தியில் உள்ளது, ஆரம்பத்தில் இல்லை. நீங்களும் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நமக்கு 84 பிறவிகள் முடிந்து விட்டன. மீதி எவ்வளவு சமயம் இருக்கும்? நீங்கள் கேட்பீர்கள், நாங்கள் எப்போது சொர்க்கம் அல்லது சுகதாமத்திற்குச் செல்வோம்? ஆனால் பாபா சொல்கிறார், இந்த வாழ்க்கையோ மிகவும் மதிப்பு வாய்ந்தது எனச் சொல்லப்படுகின்றது. நீங்கள் ஸ்ரீமத்படி மிகவும் பெரிய சேவை செய்கின்றீர்கள். பாண்டவர்களாகிய நீங்கள் தான் ஸ்ரீமத்படி நடக்கின்றீர்கள். கீதை முதலானவற்றில் இந்த விஷயங்கள் இல்லை. இந்த பாபா (பிரம்மா) அதிகமாகவே சாஸ்திரங்கள் முதலியவற்றைப் படித்திருக்கிறார், குருமார்களைக் கொண்டிருக் கிறார். எல்லா நடிகர்களின் நடவடிக்கைகளையும் நீங்கள் அறிவீர்கள். சாஸ்திரங்களையோ பிற்காலத்தில் அவர்கள் உட்கார்ந்து உருவாக்குகின்றனர். அவர்களுக்கு என்ன தெரியும்? இதுவும் டிராமாவில் விளையாட்டாக உருவாக்கப் பட்டுள்ளது. கீதை-பாகவதம் எல்லாம் அந்தந்தச்

சமயத்தில் மீண்டும் உருவாகும். கீதை என்பது தாய்-தந்தை. கீதை மாதா எனச் சொல்லப் படுகின்றது. வேறு எந்த ஒரு புத்தகத்தையும் மாதா எனச் சொல்ல மாட்டார்கள். இதன் பெயரே கீதா மாதா. நல்லது, அதைப் படைத்தவர் யார்? முதல்-முதலில் ஆண் பெண்ணைத் தத்தெடுக் கின்றார் இல்லையா? ஆண் திருமணம் செய்கிறார் என்றால் வாயினால் சொல்கிறார்--இவள் என்னுடைய மனைவி. ஆகவே படைப்பாக ஆகிறது இல்லையா? பிறகு அவர் மூலமாகக் குழந்தைகள் பிறந்தாலும் இவர்கள் என்னுடையவர்கள் என்று சொல்வார். குழந்தைகளும் சொல்வார்கள், இவர் எங்களுடைய தந்தை. நீங்களும் கூட பாபாவின் முகவம்சாவளி இல்லையா? நீங்கள் சொல்கிறீர்கள்--பாபா, நாங்கள் உங்களுடையவர்கள். இவ்வளவு காலம் நாங்கள் மாயாவின் வழிமுறைப்படி நடந்து வந்தோம். இப்போது உங்கள் வழிமுறைப்படி நடப்போம். மாயா ஏதோ வாயினால் வழிமுறை எதையும் சொல்வதில்லை. செயல்களை அதுபோல் செய்கின்றனர். இங்கோ பாபா வாயினால் சொல்லிப் புரியவைக்கின்றார்.

நீங்கள் அனைவரும் பாரதவாசிகள். நீங்கள் அறிவீர்கள், பாரதம் தான் தலைக்கிரீடமாக இருந்தது. இப்போது இரண்டு கிரீடமும் இல்லை. தூய்மையின் கிரீடமும் இல்லை, தூய்மையற்ற கிரீடமும் இல்லை. ஹர் ஹோலினெஸ், ஹிஸ் ஹோலினெஸ் என்கிறார்கள். ஆண்-பெண் இருவருக்கும் சொல்கிறார்கள். சந்நியாசிகளுக்கு ஹிஸ் ஹோலினெஸ் என்று சொல்கிறார்கள். ஆனால் இல்லற மார்க்கம் இல்லை. இல்லற மார்க்கத்திலோ ஆண்-பெண் இருவரும் பவித்திரமாக இருக்கின்றனர். சத்யுகத்தில் இருவருமே தூய்மையாகவே இருக்கின்றனர். அது முழுமையான தூய்மை எனப்படுகின்றது. ஆத்மா, சரீரம் இரண்டும் தூய்மையாக உள்ளன. இங்கே தூய்மையில்லாத உலகில் இவ்விரண்டுமே தூய்மையாக இருக்க இயலாது. ஆக, இப்போது நீங்கள் பாபாவின் முன்னிலையில் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இது ஞான மழை எனப்படுகின்றது. அது விஷத்தின் மழை. இது ஞான அமிர்தத்தின் மழை. பாடுகின்றனர் இல்லையா - அமிர்தத்தை விட்டு விஷத்தை எதற்காக அருந்தினார்கள்? உங்களுக்கு இப்போது ஞான அமிர்தம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. பக்திமார்க்கத்திலோ அப்படியே பாடிக் கொண்டே இருக்கின்றனர். இப்போது உங்களுக்கு நடைமுறையில் ஞான அமிர்தம் கிடைக்கின்றது. இதிலிருந்து தான் அமிர்தசரஸ் என்ற பெயர் வந்துள்ளது. மற்றப்படி குளங்களோ இதுபோல் நிறையவே உள்ளன. மானசரோவர் கூட உள்ளது இல்லையா? மானசரோவர், மனிதர்களின் சரோவரோ அதுவல்ல. இதுவோ ஞான அமிர்தத்தின் சரோவர். இது ஞான மானசரோவர் என்றும் சொல்லப்படுகின்றது. ஞானக்கடலும் இருக்கின்றார். சிலர் நதிகளாக உள்ளனர். சிலர் கால்வாய்களாக உள்ளனர். சிலர் குளமாக உள்ளனர். நம்பர்வார் இருக்கத் தான் செய்கிறார்கள் இல்லையா? குழந்தைகள் புரிந்து கொண்டு விட்டார்கள். கல்பத்திற்கு முன்பும் கூட பாபா புரியவைத்திருந்தார். பிறகு மீண்டும் இப்போது புரிய வைத்துக் கொண்டிருகின்றார். நீங்கள் நிச்சயம் செய்கிறீர்கள், நாம் பாபாவிடம் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறோம். இதன் மூலமாகத் தான் நாம் கல்பத்திற்கு முன்பும் கூட சொர்க்கத்தின் எஜமானர் ஆகியிருக்கின்றோம். பிரஜைகளும் கூட சொல்வார்கள், நாங்கள் எஜமானர்கள் என்று. பாரதவாசிகள் சொல்கிறார்கள் இல்லையா, நமது பாரதம் அனைத்தையும் விட உயர்ந்தது என்று. இப்போது நமது பாரதம் அனைத்தையும் விடத் தாழ்ந்ததாக உள்ளது. நமது பாரதம் மிக உயர்ந்ததாக இருந்தது. இப்போது நமது பாரதம் மிகவும்

கீழானதாக ஆகிவிட்டுள்ளது. வேறு எந்த ஒரு கண்டத்திற்கும் இதுபோல் சொல்ல மாட்டார்கள். பாரதம் மிகப் பழமையானது அப்போது நாம் இல்லை என்பதை அனைத்து தர்மங்களைச் சேர்ந்தவர்களும் கூட அறிந்திருக்கிறார்கள்- சத்யுகத்தில் நிச்சயமாக பாரதவாசிகள் மட்டுமே இருப்பார்கள். கிறிஸ்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் பாரதம் மட்டுமே இருந்தது, வேறு எந்த ஒரு தர்மமும் இல்லை. புதிய உலகில் புதிய பாரதம் இருந்தது. இப்போது பழைய பாரதமாக உள்ளது. பாரதம் சொர்க்கமாக இருந்தது. ஆனால் யாருடைய புத்தியிலும் முழுமையாகப் பதிவதில்லை. இதுவோ சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய விஷயம். பாபா உங்களுக்குப் புரியவைத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் நடைமுறையில் காரியமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரம் உண்மையிலும் உண்மையான வியாசர் ஆகவேண்டும். உண்மையான கீதையைச் சொல்ல வேண்டும். நீங்கள் புத்தகங்கள் எதையும் எடுக்க வேண்டியதில்லை. நீங்களோ யோகி மற்றும் ஞானியாக இருக்கிறீர்கள்; ஆத்மாக்கள் நீங்கள் பாபாவிடமிருந்து கீதை ஞானம் கேட்கிறீர்கள். உங்கள் புத்தியில் ஒரு பாபா மட்டுமே இருக்கிறார். வேறு எந்த ஒரு குரு முனி, சாது சந்நியாசியும் இல்லை. நீங்கள் சொல்வீர்கள், நாங்கள் பரமபிதா பரமாத்மாவிடமிருந்து கேட்கிறோம். அவரையே சத் ஸ்ரீ அகால் என்கிறார்கள். இவ்வார்த்தை எவ்வளவு இனிமையாக உள்ளது! அகாலி மக்கள் மிகுந்த சப்தமாகச் சொல்கிறார்கள்--சத் ஸ்ரீ அகால்.!

இங்கே குழந்தைகளாகிய நீங்கள் ஞான நாட்டியம் ஆடுகின்றீர்கள். அதனால் உண்மையானவர்கள் என்றால் குஷியில் நாட்டியமாடிக் கொண்டே இருப்பார்கள் என்று சொல்லப்படுகின்றது. பிறகு நீங்கள் போய் ராஸ்-விலாஸ் (நாட்டியம்) ஆடுவீர்கள். மீராவும் கூட ஆழ்தியானத்தில் (டிரான்ஸில்) நடனம் முதலியன செய்திருக் கிறார். ஆனால் அவர் பக்தி செய்தார். நீங்கள் பக்தி எதுவும் செய்வதில்லை. திவ்ய திருஷ்டி தருபவராகிய சுயம் பாபா உங்களுக்குக் கற்றுத் தந்து கொண்டிருக்கின்றார். அநேகக் குழந்தைகள் சாட்சாத்காரம் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் மனிதர்கள் நினைக்கிறார்கள், இது ஏதோ மாயமந்திரம் என்று. குழந்தைகள் படிக்கும் போது நடமாடிக் கொண்டே இருக்கிறார்கள் இல்லையா? உங்களுக்காகவும் இந்த விளையாட்டு உள்ளது. இது பாடம் எதுவும் இல்லை, மார்க் எதுவும் இல்லை. விளையாடிக் குதிப்பதற்கெல்லாம் மார்க் கிடையாது. இங்கும் கூட யார் இந்த விளையாட்டில் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஞானத்தின் மார்க் கிடைக்காது. இதுவோ விளையாட்டு, இது அவ்யக்த விளையாட்டு எனச் சொல்லப்படுகின்றது. அது வ்யக்த விளையாட்டு, இது அவ்யக்த விளையாட்டு. ராஸ் முதலியன செய்வோருக்கு மார்க் கிடைப்பதில்லை. அதனால் பாபா சொல்கிறார், டிரான்ஸை விட ஞானம் நல்லது, உயர்ந்தது. டிரான்ஸோ வெறுமனே நோக்கம் குறிக்கோளுக்கான சாட்சாத்காரமாகும். இதுவே இராஜயோகம். நோக்கம், குறிக்கோள் புத்தியில் உள்ளது. அவர்களோ இந்தக் கண்களால் பார்க்கின்றனர்--நாம் இன்னார் ஆகப் போகிறோம். இங்கோ இது உங்களது வருங்காலத்திற்கான நோக்கம், குறிக்கோளாகும். இளவரசர்-இளவரசி ஆகவேண்டும். பிறகு நீங்கள் மகாராஜா-மகாராணி ஆகிறீர்கள். நோக்கம் குறிக்கோள் இல்லாமல் யாராவது கல்லூரியில் அமர்ந்திருந்தால் அவர்களை என்னவென்று சொல்வார்கள்! பாரதத்திலுள்ள வேறு சத்சங்கங்களில் எந்த ஒரு நோக்கமோ குறிக்கோளோ கிடையாது. இதைப் பல்கலைக்கழகம் என்றும்

சொல்லலாம். பாடசாலை என்றும் சொல்லலாம். சத்சங்கத்தை ஒருபோதும் பாடசாலை என்று சொல்ல மாட்டார்கள்.

குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், நாம் பதீதபாவன் இறை தந்தையின் பல்கலைக்கழகத்தில் (காட்ஃபாதர்லி யுனிவர்சிட்டியில்) படிக்கின்றோம். முழு உலகத்தையும் நீங்கள் தூய்மையான சொர்க்கமாக ஆக்குகின்றீர்கள். உங்களுக்காகவே இவ்வுலகை சொர்க்கமாக மாற்றுகின்றீர்கள். யார் உருவாக்குவார்களோ அவர்கள் தான் பிறகு இராஜ்யம் செய்வார்கள். எல்லாருமே சொர்க்கத்தின் எஜமானர் ஆவார்கள் என்பதில்லை. யார் முழு நரகவாசிகளாக உள்ளனரோ, யார் துவாபரயுகத்திலிருந்து பக்தி செய்திருக்கிறார்களோ அவர்கள் தான் சொர்க்கவாசி ஆவார்கள். மற்ற மனிதர்கள் அனைவரும் கடுகுகளைப் போல் சிதறி அழிந்து போவார்கள். ஆத்மாக்கள் திரும்பவும் பாபாவிடம் சென்று விடுவார்கள். எவ்வளவு பெரிய வினாசம் நிகழவிருக்கிறது! இப்போதோ பிரஜைகள் அநேகர் உள்ளனர். எவ்வளவு தான் உட்கார்ந்து எண்ணுவார்கள்? துல்லியமாக எண்ண முடியாது. உலகத்தில் எவ்வளவு மனிதர்கள் உள்ளனர்? இவ்வளவு பேரும் அழிந்து போவார்கள். குழந்தைகளுக்கு ஆலமரத்தின் உதாரணம் சொல்லப்பட்டுள்ளது. கல்கத்தாவில் மிகப் பெரிய மரம் உள்ளது. அதில் அஸ்திவாரம் இல்லை. மற்றப்படி மீதி மரம் முழுவதும் நிற்கின்றது. இப்போது தேவி-தேவதா தர்மமும் உள்ளது, ஆனால் அதனுடைய பெயர் மறைந்து விட்டுள்ளது. அஸ்திவாரமே இல்லை என்று சொல்ல மாட்டார்கள். இற்றுப் போயிருந்தாலும் கூட கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அடையாளம் இருக்கும் இல்லையா? மறைந்துள்ளது என்பதன் அர்த்தமே கொஞ்சம் மிஞ்சியுள்ளது என்பது தான். சித்திரங்கள் உள்ளன. பாரதத்தில் லட்சுமி-நாராயணர் இராஜ்யம் செய்தனர். இதுவோ புரிந்து கொள்ள மிகவும் சுலபமானது. ஆனால் மாயா இராவணன் புத்திக்குப் பூட்டுப் போட்டு விடுகின்றான். பரமபிதா பரமாத்மா புத்திவான்களின் புத்தியாக இருக்கிறார். மனிதர்களிடம் புத்தி உள்ளது. ஆனால் பூட்டுப் போடப் பட்டுள்ளது. கல்புத்தியுள்ளவர்களாக ஆகிவிட்டனர். இப்போது பாபா மீண்டும் உங்களைப் (பாரஸ்) தங்க புத்தியுள்ளவர்களாக ஆக்குகின்றார். ஆத்மாவை ஆக்குகின்றார். புத்தி ஆத்மாவில் உள்ளது இல்லையா? சொல்லப்படுகின்றது இல்லையா - நீங்களோ கல்புத்தி, எருமை புத்தியுள்ளவர்கள் என்று? இங்கும் கூட அது போல் உள்ளனர். கொஞ்சம் சொல்லிப் புரிய வைத்தாலும் புரிந்து கொள்வதில்லை, ஸ்ரீமத் படி நடப்பதில்லை. ஸ்ரீமத்தோ எப்போதும் சொல்கின்றது - குழந்தைகளே! பர்வையற்றவர்களுக்கு வழி காட்டும் ஊன்றுகோலாக மாறுங்கள். பாபா சொல்வதைக் கேட்க வேண்டும், பிறகு மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். ஆகையால் சேவைக்காக வெகுதொலைவு செல்ல வேண்டியிருக்கும். ஓரிடத்தில் அமர்ந்து கொள்ளக் கூடாது.

இப்போது நீங்கள் ஞானமும் யோகமும் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே நீங்கள் சிவபாபாவின் முன்னிலையில் அமர்ந்துள்ளீர்கள். சகஜ இராஜயோகத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்--ஆஸ்தியைப் பெறுவதற்காக. நீங்கள் வந்திருப்பது விஷ்ணுபுரியின் ராஜதானியைப் பெறுவதற்காக. விஷ்ணுவின் விஜயமாலை உருவாகும். இப்போது நீங்கள் டிராமாவின் ரகசியத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நீங்கள் அறிவீர்கள்,

நிச்சயமாக தெய்வீக சாம்ராஜ்யம் இருந்தது. சத்யுக ஆரம்பத்தில் ராஜா-ராணி இருந்தனர். இப்போது கலியுக இறுதியிலோ, ராஜா-ராணி என்று யாருமே தங்களைச் சொல்லிக் கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கத்திற்கு உதவி செய்கிறார்கள் என்றால் பிறகு மகாராஜாவின் டைட்டில் கிடைத்து விடுகின்றது. அந்த அரசாங்கமும் டைட்டில் கொடுத்தது- ராவ் சாகிப், ராவ்பகதூர் முதலியவை. இப்போதோ உங்களுக்குப் பெரிய டைட்டில் கிடைத்துக் கொண்டிருக்கிறது, நடைமுறையில். நீங்கள் ஹர் ஹோலினெஸ், ஹிஸ் ஹோலினெஸ் மகாராஜா, மகாராணி ஆவீர்கள். உங்களுக்கு இரட்டைக் கிரீடம் உள்ளது. முதலிலோ புனித இராஜ்யம், பிறகு தூய்மையற்ற இராஜ்யம். டிராமாவைப் புரிந்து கொள்ள வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்துக் காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்குத் தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தினமும் ஞான அமிர்தத்தின் மானசரோவரில் குளித்தெழுந்து ஆத்மா மற்றும் சரீரம் இரண்டையும் பாவனமாக ஆக்க வேண்டும். மாயாவின் வழிமுறையை விட்டுவிட்டு பாபாவின் வழிமுறையின் படி நடக்க வேண்டும்.

2. இது விலைமதிக்க முடியாத சங்கமயுகத்தின் சமயம். இச்சமயம் ஸ்ரீமத் படி நடந்து சேவை செய்ய வேண்டும். உண்மையான வியாசர் ஆகி, உண்மையான கீதையைக் கேட்க வேண்டும், மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். யோகியாக, ஞானியாக ஆகவேண்டும்.

வரதானம்: அனேகவிதமான நெருப்பிலிருந்து தப்பிபதற்காகவும் மற்ற அனைவரையும்
தப்பிக்க வைக்க கூடிய உண்மையான கருணை மனமுடையவர் ஆகுக.

இன்றைய மனித குலம் பலவிதமான நெருப்பில் எரிந்துக் கொண்டிருக்கின்றனர். பலவிதமான துக்கம், கவலைகள், பிரச்சனைகளினால் ஆத்மாக்களுக்கு விதவிதமாக அடி ஏற்படுகிறது, இந்த நெருப்பு வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் எரிசலின் அனுபவத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் நீங்கள் அப்படிப் பட்ட வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, சிரேஷ்ட வாழ்க்கை வாழ்வதற்காக வந்துள்ளீர்கள், நீங்கள் குளிர்ச்சியான கடலின் கரையில் அமர்ந்துள்ளீர்கள், அதிந்திரிய சுகம், அமைதியின் பிராப்தியை அடைந்துள்ளீர்கள், எனவே கருணை மனமுடையவராகி மற்ற ஆத்மாக்களையும் பல விதமான நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள், ஒவ்வொரு தெருவிலும் ஞான அளிக்கும் இடத்தை உருவாக்கி அனைவருக்கும் நல்ல வழி காட்டுங்கள்.

சுலோகன்: யாருக்கு பாபாவிடம் உண்மையான அன்பு இருக்கிறதோ,

அவர்களுக்கு அசரீரி ஆவது எளிதாகும்.